விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 13 ரபி - ஆகி 5 இதழ் 314
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-12-84

## இலங்கை இனப்பிரச்னை
# பொதுத் தேர்தலின் பின்னர் இந்தியா புதிய முயற்சிகள்
## சென்னையில் 'அமிர்' தகவல்

(சென்னை)

''இலங்கையின் இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண இந்தியா பொதுத்தேர்தலின் பின்னர் புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் 'பி. ரி ஐ' செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இலங்கையின் இனப் பிரச்னை தொடர்பாக திரு. ஜி. பார்த்தசாரதியுடன் அடிக்கடி தொடர்புகொண்டு நிலைமைகளைத் தெரிவித்துவருகிறேன்.

''சர்வகட்சி மகாநாட்டு யோசனைகள் கைவிடப்பட்டுள்ளதால், அடுத்த நட

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# காலக்கெடு இன்று காலைவரை நீடிக்கப்பட்டது!

## பொலிஸார் கடத்தப்பட்டு இன்றுடன் ஒரு வாரமாகிறது

(யாழ்ப்பாணம்)

**கடத்திச்செல்லப்பட்ட இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் விடுவிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த காலக்கெடு, இன்று காலை எட்டரை மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.**

**பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள், 'இயக்கம்' என்ற தீவிரவாதக் குழுவினரால் கடத்தப்பட்டு இன்றுடன் ஒரு வாரமாகிறது.**

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் திரு நாணயக்காராவும், திரு றெறன் சில்வாவும் யாழ். ரயில் நிலையத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.

இருபத்து ஐந்தாம் திகதியிட்டு 'இயக்கம்' எனும் தீவிரவாதக் குழு. யாழ் அரசாங்க அதிபர் மூலமாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ஆர் சுந்தாலிங்கத்துக்கு தங்களது கோரிக்கை அடங்கிய கடிதத்தை அனுப்பி இருந்ததும், நேற்று முன்தினமிரவு ஒன்பது மணிவரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

### நேற்று 2-வதுகடிதம்

நேற்றுப் பிற்பகல் தங்களது இரண்டாவது கடிதத்தை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மூலமாக 'இயக்க' குழுவினர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு சுந்தரலிங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இக்கடிதத்தில், காலக்கெடு [இன்று] வெள்ளிக்கிழமை காலை எட்டரை மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும். அதற்குள் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

### சூசகத்தகவல்

தங்களது கோரிக்கையை

(6-ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

## விடுதலைசெய்யுமாறு தமிழ் நீதியரசர்கள் கோரிக்கை

[கொழும்பு]

கடத்தப்பட்ட இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும் விடுதலை செய்யுமாறு, ஓய்வு பெற்ற மூன்று உயர்நீதி மன்ற தமிழ் நீதியரசர்களும் பிரபல சட்டத்தரணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று இவர்கள் கூட்டாக விடுத்திருந்த ஒரு அறிக்கையில் கடத்தப்பட்ட பொலிஸ்இன்ஸ்பெக்டர்களை, எவ்வித துன்புறுத்தலுக்குமுள்ளாக்காமல், மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

## தமிழ்நாடு சட்டசபை: நள்ளிரவுக்கு முன்னர் 200 முடிவுகள்!

[சென்னை]

தமிழ்நாடு சட்டசபைக்கான 20 தொகுதிகளின் முடிவுகள் இன்று மாலை 6 மணிக்குள் வெளிவந்துவிடுமென தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ஓஸா தெரிவித்தார்.

சட்டசபையின் 200 தொகுதிகளுக்கான முடிவுகள் இன்று நள்ளிரவுக்குள் வெளிவந்துவிடுமெனவும் அவர் கூறினார்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து லோக்சபைக்கான 10 தொகுதி முடிவுகளும் இன்று நள்ளிரவுக்குள் வெளிவருமென்றும் அவர் தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை பிற்பகலுக்குள் தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிகளுக்கான முடிவுகளும்வெளிவந்துவிடுமெனவும் அவர் கூறியுள்ளார்.

## தீவுப்பகுதி சென்ற தபால்பை துப்பாக்கிமுனையில் அபகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். தபால் நிலையத்திலிருந்து தீவுப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட தபால் பைகள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று நண்பகல் வ. பி. போ சபை பஸ்ஒன்றில்தபால் பைகளைக் கொண்டு சென்றபோது மண்கும்பானில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, அனலை தீவு, வேலணை, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கான தபால் பைகளே கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## பேர்ஸி இலங்கை விஜயம்

[கொழும்பு]

அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுத் தலைவர் திரு. சாள்ஸ் போஸி இலங்கை வந்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் ஜனதிபதி திரு ஜே ஆர். ஜயவர்தனவைச் சந்தித்தார்.

## கோப்பாயில் நேற்று பலத்த சோதனை

[யாழ்ப்பணம்]

கோப்பாய் பகுதியை நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினர் சுற்றிவளைத்து பலத்த சோதனை நடாத்தினர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இடை இடையே கேட்டன. நீர்வேலி-கரந்தன் பகுதியிலும் இராணுவத்தினர் சோதனையிட்டனர்.

நாவற்குழிப் பகுதியிலும் சோதனை நடாத்தப்பட்டது. அச்சுவேலியில் ஹெலிகொப்டர் தாழப்பறந்து தேடுதலில் ஈடுபட்டிருந்தது.

கோப்பாய் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள்கேட்டு, மக்கள் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

## அரசின் மனிதாபிமானமற்றசெயல்கள்: தொழிற்சங்க கூட்டுக்குழு கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசத் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவினால் ஜனதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனவிற்கு மகஜரொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

''வட பகுதியில் திணிக்கப்பட்டுள்ள கொடூரமான அவசரகால ஆட்சியையும், ஆயுதப்படையினர் மூலம் அரசாங்கத்தினால் குடிமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பயங்கரவாதச் செயல்களையும்எமது தொழிற்சங்க இயக்கங்களும், தொழிற்சங்க பிராந்தியக் கிளைகளும் கண்டிப்பதுடன், பின்வரும் மனிதாபிமானமற்ற செயல்கள் மீது வன்மையான சண்டனத்தை தெரிவிக்கின்றன.

''பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற போர்வையில் சமீபகாலத்தில் ஒரு குற்றமுமறியாத எமது தொழிற்சங்க உறுப்பனர்கள் உட்பட எத்தனையோ அப்பாவித் தொழிலாளர்களையும், பொது

[5-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## யாழ். மாநகரசபை பட்ஜட்: மேலதிகம் ரூ. 64,190

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாண மாநகரசபையின் 1985ம் ஆண்டுக்கான மொத்தவருமானம் 600,11,060 ரூபாவாகும். சபையின் செலவினம் 599,46,870ரூபாவாகும். மேலதிகம் 64,190 ரூபாவாகும்''

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ கே. சிவஞானம் தலைமையில் கமிட்டி அறையில் நேற்றுக்காலைநடந்த வரவு செலவுத்திட்டக் கூட்டத்தில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது

சபை ஊழியர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில், ஆணையாளர் 85ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்

இக்கூட்டத்தில் 1984ம் ஆண்டின் உப-வரவு செலவுத் திட்டமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் மொத்த வருமானம் 59,305 520ரூபாவாகும் இதன் செலவினம் 59,195,360 ரூபாவாகும். மேலதிகம் 110,160 ரூபாவாகும்.

இக்கூட்டத்தில் யாழ். நகரில் சில பகுதிகளில் அமுல் செய்யப்பட்டுவரும் யுனிசெவ் திட்டத்திற்கான வரவு செலவும் தெரிவிக்கப்பட்டது. இதன்

(6-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## 'அந்த' வெளிநாட்டுக்கடிதங்கள்: நான்கு ஊழியர்கள் குற்றத்தை ஏற்றனர்!

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் அனுப்பிய வெளிநாட்டுக் கடிதங்கள் யாழ் தபால் கந்தோருக்குப் பின்னால் உள்ள பற்றைக்குள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக நடந்த விசாரணையில் நான்கு ஊழியர்கள் சம்பந்தப்பட்டிருந்ததாகத் தெரியவந்துள்ளது.

இந்த நால்வரும் மேற்படி வெளிநாட்டுக் கடிதங்களில் கையாடல் செய்த வெளிநாட்டுப் பணத்தை கையளிப்

(6ம்பக்கம் 3ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் சகல வசதிகளுடன் வீடு ஒன்று இரண்டரை நிலப்பரப்பு விற்பனைக்குண்டு; தொடர்பு: 1A, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (1092)

புதிதாக றீபோறிங், டிங்கறிங், பெயின்றிங் செய்யப்பட்ட மொறிஸ் மைனர் யோசப், மிருக-வைத்தியர், யாழ்ப்பாணம். 1099

நல்லூர் வைமன் வீதியில் நவீன வசதியும் நன்நீர் சுற்று மதிலுடனும் கூடிய 4 அறை புதிய வீடு 2 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. விபரம்: 55 A, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (1089)

45 நாள் சுத்தமான அல்சேசன் (Pine Alsation) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ச. தியாகராசா, கேணியடி லேன், திருநெல்வேலி. (1077)

மிகச்சிறந்த நிலையில் உள்ள 12 ஸ்ரீ 8145 DATSUN SUNNY B 211 விற்பனைக்குண்டு. இல. 68, கலட்டி அம்மன் வீதி, வண்ணார்பண்ணை. 1110

கிளிநொச்சி கனகபுரத்தில் இரண்டு ஏக்கர்காணி வீடு கட்டவும், மேட்டுப்பயிர் செய்யவும் உகந்தது. S. அந்தோனி, மிருக வைத்தியக் கந்தோர், கிளிநொச்சி. 1111

கொழும்புத்துறையில் 5 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. முழுமையாகவோ, பிரித்தோ விற்கப்படும். தொடர்பு: 125, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (CHINESE RESTAURANT முன்பாக) 1103

சிறந்த வியாபாரம் நடப்பதும் சகல பொருட்களும் துரித விற்பனை செய்யக்கூடியதுமான கடை குத்தகைக்கு கிடைக்கும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1118

குளிர்சாதனப் பெட்டி, ஸ்ரீடியோ செற் (காற்றுடி) வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி இ. தமகுமார், 'கோகில பவனம்' ஏழாலை வடக்கு ஏழாலை. 1102

## விற்பனைக்கு

வெளிநாடு செல்லவிருப்பதால் சமையல் அறைப்பாத்திரங்கள், காற்றுடி, கொட் (Cot) உட்பட வீட்டுத்தளபாடங்களை மலிவு விலையில் விற்பனை செய்யவுள்ளோம். நேரில் வரவும். திருமதி எம். ரெதராஜா, 69, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1121

## தேவை

அச்வேலியில் உள்ள எவர்சில்வர் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள வேலையாட்கள் உன் தேவை. ஒட்டுனர், (Welders) பொருத்துனர், (Fitters) ஸ்பின்னேஸ், (Spenners) Lathemen, Hot Dip Galuanizing உடன் விண்ணப்பிக்கவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ், கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி, 1113

சுண்டிக்குளிச் சூழலில் தாயும், படித்துக்கொண்டிருக்கும் மகளும் தங்குவதற்கு அறை அல்லது அனெக்ஸ் தேவை. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அயல் விரும்பத் தக்கது. வாடகை விபரத்துடன் தொடர்பு: திருமதி சிவப்பிரகாசம், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 1122

அனுபவம் உள்ள மின்தறி நெசவாளர் (பெண்கள்) உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. ஜெறுட், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, அந்தோனியார் கோவில் முன்பாக, சுன்னுகம். 1117

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன், ஒரு வீட்டின் சிறிய பகுதி, யாழ்—கண்டி வீதியில் உடனடியாக வாடகைக்கு உண்டு. திருமதி மகாதேவா, 254, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (1093)

வேலை செய்பவர்களுக்கு மட்டும் சாப்பாட்டுடன் கூடிய அறை வாடகைக்கு உண்டு, வெளியாருக்கு மூன்று நேர சாப்பாட்டு வசதி உண்டு. 154/8B, ஆத்திசூடி வீதி, (இந்து மகளீர் கல்லூரிக்கு பின்புறம்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1115

## வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்:

விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா

SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA

Attractive fares to European Countries U. S. A. Canada and Australia.

* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வார நாட்களில் காலை 8.30 முதல் 4.30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

**மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

த. பெ. எண்: 92 போன்: 24154

## தவறிவிட்டது

506781957V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்திக்கும் ஐயனர் கோவிலடிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். திருமதி G. சிவயோகம், 40, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 1109

நாட்கலண்டர், அல்லது 10 ரூபாவிற்கு மேலதிகமாக புத்தகங்கள் வாங்குபவர்களிற்கு

பொக்கட் கலண்டர் இனும்

**அன்புஜீ புத்தக நிலையம்**

1106

அன்பளிப்பு கலண்டர் அச்சிடுபவர்களுக்கு சகலவிதமான கலண்டர்களும் எம்மிடம் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

**அன்புஜீ புத்தக நிலையம்**

248/9, கே கே.எஸ். வீதி, யாழ்நகர். (1107)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரையின் மரண சாதனமில்லா சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்

—மரணமெய்தியவர்

வழக்கு இல.
தத்துவம்/217

கந்தையா செல்லத்துரை கைம்பெண் புவனேஸ்வரி உடுவில் தெற்கு, சுன்னுகம்

—மனுதார்

எதிராக

1. செல்லத்துரை இராஜா சுரேஷ்
2. செல்லத்துரை சுரேஷ்ராஜா, பராயமடையாதவர்
3. பொன்னையா தருமலிங்கம் கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

—எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனமில்லாத சொத்துக்களை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ஆம் ஆண்டு தை மாதம் 23ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1984ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 15ந் திகதி.
இன்று முத்திரையிடப்பட்டது.
என்னல் வரையப்பட்டது

க. அரியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி
(1119)

## விற்பனைக்கு

தொடர்ந்தும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

**Red Rose Poultry Farm**

கெருடாவில், தொண்டைமானாறு.

முதல் தரமான இறைச்சிக் கோழிகள், முட்டைகள், முட்டை இடும், இட்ட கோழிகள், இரண்டுமாத குஞ்சுகள் ஆகியன நியாயமான விலையில் எந்நாட்களிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்;—

நடராஜா ஸ்ரீதரன், யாழ். றோட், வல்வெட்டித்துறை.

இரத்தினமாளிகை, 57, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(1101)

# QUICK TRAVELS

யாழ். மக்களின் நம்பிக்கையான
குயிக் றவல்ஸ் ஸ்தாபனத்தாரின்
தொடரும்
ஏழாவது ஆண்டு சேவையில்
அதிவிரைவான பெர்லின் ரிக்கற்
ஆகக் குறைவான கட்டணத்தில் தரப்படும்.
வெளிநாடு சம்பந்தமான
எல்லாத் தேவைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.

குயிக் றவல்ஸ்
136, கஸ்தூரியார்வீதி.
யாழ்ப்பாணம்.

ரேடெக்ஸ் றவல்ஸ்
சிலிங்கோ மாளிகை,
முதல் மாடி, கொழும்பு-1.

குறிப்பு: 24-12-84க்கு எம்மிடம் ரிக்கற் செய்தவர்கள் எல்லோரும் பெர்லின் சென்றுவிட்டார்கள். 27-12-84க்கு பயணத்திற்கு உரியவர்கள் 31-12-84க்குத் தான் பயணம் செய்யலாம் என்று அறியத்தருகின்றோம். (1108)

## 7-வது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
05-12-1914

மறைவு:
16-12-1977



**அமரர் இ. கோவிந்தபிள்ளை**

(உரிமையாளர், பாரத்கபே)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எங்களை ஆறாத் துயரில் மூழ்கவிட்டு இறைவனடி எய்திய எங்கள் அன்புத் தெய்வமே; இன்று முதல் உங்கள் பிரிவு எட்டு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களைவிட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

86/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1044)

## மரண அறிவித்தல்

**கதிரேசு பொன்னையா** (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

ஓய்வு பெற்ற ஆசிரியர் கதிரேசு பொன்னையா காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், இந்திராதேவி (விரிவுரையாளர், வெலிசறை விவசாயக் கல்லூரி), ரதிராணி (உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்), ரவீந்திரன் (புகையிரத நிலைய அதிபர், முருகண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், G T. C. றுபேறு (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி பம்பலப்பிட்டி), மகேந்திரலிங்கம் (மதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்). பத்மினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷானி, மஞ்சுளா, திவாகரி, பிரியதர்சினி, கஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் ஈமச் சடங்குகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் 16 6, கலட்டி இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றாரும், உறவினர்களும் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 1116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேர்தல் வன்முறை: 20 பேர் மரணம்!

(புதுடில்லி)

**இந்தியாவில் தேர்தல் வன்முறைகள் காரணமாக கடந்த சில தினங்களில் 20 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர். உடமைகளும் சிறியளவில் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

இக்கொலைச் சம்பவங்கள் பல வடஇந்திய மாநிலங்களிலேயேஇடம்பெற்றுள்ளன. இத்துடன் பல அரசியல் தலைவர்களுக்கும், வேட்பாளர்களுக்கும் கொலைப் பயமுறுத்தல்களும்விடுக்கப்பட்டுள்ளன. சகல வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் ரஜீவின் பாதுகாப்பு அதிதீவிரமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய லோக்சபா தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

பாரதீய ஜனதா தலைவர் திரு. வாஜ்பேய், காங்கிரஸ் சோஷலிஸ்ட் தலைவர் திரு. சரத்பவான், அமைச்சர்கள் நரசிம்மராவ், சிவசங்கர், வசந்சாத்தே, உட்பட சென்னு ரெட்டி, பிரமானந்தரெட்டி அஞ்சையா, விஜயபாஸ்கர ரெட்டி, அந்துலே ஆகியோர் இந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்களாவர்.

வாக்களிப்பு யாவும் அமைதியாக இடம்பெற்றுள்ளன. வட இந்தியப் பகுதிகளில் கடுங்குளிர் நிலவுகின்றது. இக்குளிரையும் பொருட்படுத்தாமல் தடித்த கம்பளிகளால் உடம்பைப் போர்த்தபடியும், குளிர்காய நெருப்பை மூட்டி வைத்தபடியும் வாக்காளர்கள் வாக்குச் சாவடிகள் முன்னால் கூடிநிற்கின்றனர்.

வடஇந்திய மாநிலங்களில் சில இடங்களில் குளிர்மரணங்களும் சம்பவித்துள்ளன என்று கூறப்பட்டது. (கி)

---

மன்னார் அசம்பாவிதங்கள்:

# கொலைகள் தொடர்பாக நீதிவிசாரணை நடத்தவும்!

## மன்னார் பிரஜைகள்குழு மகஜர்

[மன்னார்]

''மன்னார் பகுதியில் கடந்த 4-ம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது இடம்பெற்ற கொலைச் சம்பவங்கள் தொடர்பாக பாரபட்சமற்ற நீதி விசாரணையை நடத்துவதற்கு உத்தரவு இடுக''

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை மன்னார் பிரஜைகள் குழு ஜனதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மன்னார் பகுதியில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் அதிர்ச்சியைத் தந்துள்ளன. மன்னார் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது, மரணமானவர்களில் 76 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 14 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

இவர்களில் 5 பேர் பெண்களாகும் பெரும்பாலும் 50 வயதிற்குட்பட்டோரே மரணமாகி யுள்ளனர்.

மன்னார்-முருங்கன் வீதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது ஒரு இராணுவ வீரர் மரணமானதுடன், 6 இராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

இதனையடுத்து இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது பலர் உயிரிழந்ததுடன் பலரது உடமைகளும், வீடுகளும் தீயிடப்பட்டன. உயிரிழந்தவர்களை நம்பிவாழ்ந்த பல குடும்பங்கள் இன்று பல கஷ்டங்களுக்குள்ளாகியுள்ளன.

ஆதலால் இச் சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை நடத்த உத்தரவிடுவதோடு, கஷ்டத்துக்குள்ளாகியுள்ள குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும். (கி)

---

# மாதகலில் வயல் வெளிகள் சுடுகாடாகும் நிலை!

(சுன்னுகம்)

கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரம்வரை தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அமுல் செய்யப்பட்டுள்ளதால், மாதகல் பகுதி மக்கள் இறந்தவர்களை உரிய மயானத்தில் தகனம் செய்ய முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மாதகல் பகுதியில் உள்ள ஒரே ஒரு மயானம் கடற்கரையோரமாக பழைய இராணுவ முகாமுடன் சேர்ந்தாற்போல்உள்ளது இம்மயானமும் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் அடங்குகிறது. தற்பொழுது இம்முகாமில் இராணுவத்தினர் இல்லை. ஆனல் இராணுவத்தினர் இப்பகுதியால் அடிக்கடி ரோந்து சுற்றிவருகிறார்கள். இதனல் இறந்தவர்களை மயானத்தில் தகனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு சட்டத்தினுல் தற்பொழுது இறந்தவர்களை வயல்வெளி..ளிலேயே போட்டு தகனம் செய்கிறார்கள். இதுவரை 8 பேரின் சடலம் வயல் வெளியிலேயே தகனம் செய்யப்பட்டன.

கடந்த புதன்கிழமை பெரிய தம்பி என்பவரது சடலம் காஞ்சிபுரம் பகுதியில் உள்ள வயல் வெளியிலேயே தகனம் செய்யப்பட்டது. இதனல் பல விவசாயிகள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (கி)

---

# சுவிஸ் மக்களுக்கு இலங்கை தமிழ் இளைஞர் மீது அனுதாபம்

(க. ஜீவகதாஸ்)

சுவிற்சலாந்தில் புகலிடம் கோரித் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மீதான விசாரணைகள் தற்போதும் தொடர்ந்து நடந்து வருவதாகவும், இதுவரை பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களது விண்ணப்பங்களை அரசு நிராகரித்துள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.

அங்கு தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் இளைஞர்களை அரசு 'அகதி' அந்தஸ்தில் உத்தியோகபூர்வமாக அழைப்பதில்லையெனவும், மாறுக 'புகலிடம் கோருபவர்கள்' என்ற பதப்பிரகாரமே அழைப்பதாகவும் அறியப்படுகின்றது.

புகலிடக் கோரிக்கை மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு நிராகரிக்கப்படும் தமிழ் இளைஞர்களை, அந்நாட்டு அரசு-சிவில் பாதுகாப்புப் புகலிடம் எனும் இடத்தில் தற்காலிகமாகத் தடக அனுமதி வழங்கியுள்ளதெனவும் அவ்வாறு அச் சிவில் பாதுகாப்புப் புகலிடத்தில் தங்குபவர்கள் கட்டாயமாகக் காலை எட்டுமணிக்கு முன்னர் வெளியேறி மீண்டும் இரவு ஒன்பது மணிக்கு முன்னர் குறித்த புகலிடத்துக்கு வந்துவிட வேண்டும் எனக் கடுமையாகக் கேட்கப்படுகின்றார்கள்.

அத்துடன் சுவிஸ் பொலிசாரும், இலங்கைத் தமிழ் இளைஞர்கள் மீது எந்நேரமும் கண்காணிப்பாக இருக்கின்றனர் எனவும் அறியப்படுகின்றது.

### அனுதாபம்

பல ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்து புகலிடம் கோரி, சுவிற்சிலாந்துக்கு வந்துள்ள இலங்கைத் தமிழ் இளைஞர்களின் பரிதாபநிலை-சுவிஸ் மக்கள் மத்தியில் அனுதாபத்தைப் பெற்றுள்ளது.

இதன் காரணமாக சுவிற்சலாந்தின் ஜேர்மன் பகுதி மக்கள் சிலர், சுவிற்சலாந்திலுள்ள 'ஒல்ரென்' நகரில் அண்மையில் கூடி, இலங்கைத் தமிழ் இளைஞர்களின் நிலைமைகள் பற்றி ஆராய்ந்தனர்.

### இருப்பிடவசதி

இதன் பலனுக, அவர்கள் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு இருப்பிட வசதிகளை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாக 'இலவச இடம் வழங்கும் நடவடிக்கை' எனும் செயல்பாட்டினை உருவாக்கியுள்ளனர்.

இச்செயல்பாட்டின் அடிப்படை நோக்கம், இருப்பிட வசதியற்றுத் தத்தளிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு உதவுவதேயாகும். இதனையடுத்து சுமார் 100 குடும்பங்கள் இத்திட்டத்திற்கு உதவி அளித்து ஆதரவளித்து வருகின்றன எனத் தெரிகின்றது.

இவ்வாறு இத்திட்டத்திற்கு உட்பட்டு இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கான, உணவு மற்றும் வசதிகளையும், தேவைகளையும் சுவிற்சலாந்திலுள்ள சில தர்மசிந்தனையுள்ள நிதிஸ்தாபனங்கள் வழங்கி வருகின்றன.

அத்துடன் சுவிஸ் தேசத்தின் தற்போதைய 'கடும் குளிர்' காலநிலையையும் தமிழ் இளைஞர்களுக்குச் சாதகமாக அமையவில்லை எனவும் தெரிகின்றது.

தொடர்ந்தும் சுவிஸ்தேசத்தில் இருப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை எனப் புரிந்து கொள்கின்ற சில தமிழ் இளைஞர்கள்-சுவிஸ்சலாந்தில் இருந்து பிரான்ஸ்சு, இத்தாலி போன்ற நாடுகளுக்குப் போவதற்கான முயற்சிகளில் உள்ளனர் எனவும் அறியப்படுகின்றது.

---

மன்னார் அகதிகளுக்கு

# இரு வாரங்களுக்கு தேவையானஉணவு!

(மன்னார்)

முருங்கன் உயிலங்குளம் பறப்பான்கண்டல் ஆகிய பகுதிகளில் கடந்த 4-ம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அகதிகளாக பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ள 3800 குடும்பங்களுக்கு நிவாரணமாக உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு வாரத்துக்குத் தேவையான உணவுப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளன. இந்த நிவாரணப் பொருட்களை உதவி அரசாங்க அதிபர்கள் தமது பகுதி கிராம சேவை அலுவலர்கள் விசேட சேவை அலுவலர்கள் ஆகியோரின் உதவியுடன் சேகரித்தனர்.

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'


தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியாவில் தீக்கிரையான வீடு



காட்சி 1. வவனியா ஆசிகுள தமிழ் கிராமத்தில் வெறியாட்டத்துக்குத் தீக்கிரையான விவசாயியின் வீடொன்று இது.

### ''சர்வகட்சி மகாநாடு யோசனைகள்

# அமுல் செய்வதில்லை என்ற முடிவு துர்அதிர்ஷ்டவசமானது''

### 'அமிர்' கூறுகிருர்

சென்னை, டிச. 27

''சர்வகட்சி மகாநாட்டு யோசனைகளை அமுல் செய்வதில்லை என்ற இலங்கை அரசின் முடிவு துர்அதிர்ஷ்டவசமானதாகும்.''

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

''சர்வகட்சி மகாநாட்டு யோசனைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தமிழர்விடுதலைக்கூட்டணி தயாராகவுள்ளது.

''இந்த யோசனைகளில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால் அதுபற்றி அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்கவும் தமிழர்விடுதலைக்கூட்டணி தயாராகவுள்ளது'' என்ருர்.

#### 'தொண்டா' கருத்து

'சர்வகட்சி மகா நாட்டு யோசனைகள் கைவிடப்பட்டுள்ளதால் இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி பூர்த்தியாகிவிட்டதென்று கருதக்கூடாது' என்று கிராமிய கைத்தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒத்துழைப்பு அளித்துவருமென்றும் திரு. தொண்டமான் கூறியுள்ளார்.

## வ. பி. போ. சபை தலைவர் 2–ல் நாடு திரும்புவார்

[யாழ்ப்பாணம்]

போக்குவரத்துத் துறையில் பயிற்சிபெறும் நோக்குடன் லண்டன் சென்றிருந்த வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் அடுத்தமாதம் இரண்டாம் திகதி நாடு திரும்புவார்.

நான்காம் திகதி யாழ். திரும்புவார்என்று தெரிவிக்கப்பட்டது.

# பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜன 25ல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் தற்போதைய கூட்டத்தொடரை ஜனவரி மாதம் 25-ம் திகதிக்கு ஜனதிபதி ஒத்திவைப்பார்.

புதிய கூட்டத்தொடரை பெப்ரவரி மாதம் இருபதாம் திகதி ஜனதிபதி சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப்பார்.

# இடமாற்றம் பெற்றேருக்கு ஏற்பட்டுள்ள குழப்பம்!

(மானிப்பாய்)

அடுத்த மாதம் ஜனவரி முதலாம் திகதி முதல் வடபகுதியிலிருந்து தென் இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பல அரசாங்க ஊழியர்களும் கூட்டுத்தாபன ஊழியர்களும் இப்போதுள்ள புதிய விதிகள் காரணமாக அச்சம் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

புதிய முகங்கள் விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டும்படியும் சந்தேகம் ஏற்படின் இதுவிஷயமாக சம்பந்தப்பட்டவர்களுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சினல் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலால் இவர்கள் தாமும் இவ்விதம் சந்தேகக்கண்ணேடு பார்க்கப்பட்டு சங்கடத்துக்குள்ளாகலாமென அச்சம் கொண்டுள்ளனர்,

மேற்படி நிலைமை காரணமாக தமது இடமாற்றங்கள் சிறிதுகாலத்துக்காவது ஒத்திவைக்குமாறு இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளவர்கள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## விழிப்புக்குழு அங்குரார்ப்பணம்

(சுன்னுகம்)

மாதகல் பகுதியில் நடைபெறும் பீரங்கித் தாக்குதலால் பலர் காயமடைந்துள்ளனர். இக்குண்டுகளால் தாக்கப்படுவோருக்கு முதலுதவி அளிக்கும் பொருட்டும், இக்கிராமத்தை இப்படியான அழிவுகளிலிருந்து காப்பதற்குமாக இப்பகுதியில் விழிப்புக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் நிர்வாகக் குழுத்தலைவராக திரு. வீ. கதிர்காமநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய உறுப்பினர் பெயர் வருமாறு:

உபதலைவர்: திரு. ந. அன்னராசா, செயலாளர்: திரு. மாட்டீன், உபசெயலாளர்: அமிர் செல்வக்குமார், இப்பகுதியில் உள்ள 7 வட்டாரத்திற்கும் 7 கிளைக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்]

அண்மையில் வடமாகாணத்தில் க. பொ. த.[சாதாரண] பரீட்சையில் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக பெற்ருேர்களுடன் கலந்து ஆலோசிப்பதற்காக இலங்கை ஆசிரியர் சங்கம் ஜும்மா பள்ளிவாசலில் அமைந்துள்ள வடமாகாண ஆசிரியர் மண்டபத்தில் நாளை காலை கூட்டம் ஒன்றை நடத்துகிறது.

## உணவுப்படிவங்கள் எரிப்பு

[சுன்னுகம்]

கடந்த திங்கட்கிழமை சுன்னுகம் வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முற்பகல் 11 மணியளவில் வந்த 5 இனம்தெரியாத இளைஞர்கள் அங்கிருந்த உணவு விநியோக படிவங்களை எடுத்து எரித்தனர்.

திடீரென அலுவலகத்தினுள் புகுந்த இளைஞர்கள், உதவி அரசாங்க அதிபரை இப் படிவங்களைத் தருமாறு கேட்டனர்; இவற்றை அரச அதிபர் தன்னல் தர முடியாது என்றும்; ஏழை மக்களுக்கு வாழ்வளிப்பவை என்று எடுத்துக் கூறியும் கேட்க மறுத்த இளைஞர்கள் பலவந்தமாக அலுமாரியை உடைத்து அப் படிவங்களைஎடுத்து அதே வளவில் [illegible] அங்கிருந்து சென்றனர்.

# இப்படியும் நடக்கிறது

கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக 'இயக்க'த்தினல் கையளிக்கப்பட்ட 'வீடியோ கஸட்'டை உயர் அதிகாரிகள் போட்டுப்பார்த்தபோது..............

ஒரு கட்டத்தில் 'ஈழநாடு' பத்திரிகை பளிச்சிட்டதாம்!

இந்த விபரம் எனக்குத் தெரிய வந்தபோது, 'ஏன்' என்று ஒரு கேள்வி எழுந்தது.

உரிய ஒரு உயர் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு விபரம் அறிய முயன்றேன்.

''இம்மாதம் இருபத்து ஐந்தாம் திகதி 'ஈழநாடு' பத்திரிகை, அந்த 'வீடியோ கஸட்டில் காண்பிக்கப்பட்டது.........''என்று விளக்கமளிக்கப்பட்டது.

இருபத்தைந்தாம் திகதி பத்திரிகையை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். அந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக ஒருவரிச் செய்திகூட இடம்பெறவில்லை!

இரண்டாவது தடவை சிந்தித்தபோது......... கடத்தப்பட்ட இருவரும் 25-ம் திகதிவரை சுகமாக இருக்கிருர்கள் என்பதை ஊர்ஜிதப்படுத்தவே 'ஈழநாடு' 25-ம் திகதிப் பத்திரிகை ஒரு சான்றிதழாக இன்ஸ்பெக்டர்களுடன் காண்பிக்கப்பட்டது தெரியவந்தது!

—ஊடுருவி

## மாதகலில் 'பரா' வெளிச்ச குண்டுகள்!

(சுன்னுகம்)

கடற்படையினர் நேற்றுமுன்தினம் மாதகல் கடல் பகுதியில் 'பரா' குண்டுகளைத் தீர்த்தனர்.

இக்குண்டுகள் அழிவை ஏற்படுத்துபவையல்ல. ஆனல் மேலெழுந்துசில செக்கன்டுகளுக்குவெளிச்சமாக இருக்கும். பகல் போல் இந்த வெளிச்சம் சுமார் அரைமைல் சுற்றுடலை உள்ளடக்கியிருக்கும்.

இதன் மூலம் அச்சுற்றுடலை நோட்டமிட்டு தெளிவாக 'இலக்கு'களை அறிந்துகொள்ளலாம். விமானங்களும் இக்குண்டுகளை வெடிக்கச்செய்து தேடுதலை மேற்கொள்ளும் என்று கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் இத்தகைய மூன்று 'பரா' வெளிச்சக்குண்டுகள் மாதகலில் தீர்க்கப்பட்டன. பெருஞ் சத்தத்துடன் தலா ஒவ்வொரு குண்டும் 10 செக்கன்டுகள்வரை வெளிச்சத்தை வீசிக்கொண்டிருந்தன.

(கி)

நெல்லைப் பாதிக்கும் களைகளைக் கொன்று விளைச்சலைப் பெருக்குங்கள்

மெக்வூட்ஸ் பெரகொற்
(மிலி.450) ரூபா. 44.50
மெக்வூட்ஸ் எம். சி.பீ.ஏ 40
(மி.லி. 450) ரூபா. 36.00
யூ. 46 எம். 6 (60%)
(மி.லி. 450) ரூபா. 60.00
மெக்வூட்ஸ் 3.4 டீ.பீ.ஏ.
(மி.லி. 450) ரூபா. 58.00


பாவித்து அதிக விளைச்சலும் இலாபமும் பெறுங்கள்



மெக்வூட்ஸ் லிமிட்டெட்
10, ஞானர்த்த பிரதீப மாவத்தை, த.பெ.இல. 91,
(மூன்ருள் மருதானை ரோட்) கொழும்பு 8
தொலைபேசி: 597965–9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு தீக்கிரையான வீடு



காட்சி 2. தீக்கிரையாகிய இருபது வீடுகளில் மற்றோர் வீடு இது.

# திருவெம்பாக்காலச் சிறப்பு

யாழ்ப்பாணம் முழுவதற்கும் சிறந்த சைவச் சூழலை ஏற்படுத்தும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவைப் போன்று சைவ மக்கள் மத்தியில் தெய்வீகப் பொலிவு நிறைந்த மங்கல நாட்களாக விளங்குவன திருவெம்பாவைக் காலமான பத்து நாட்களாகும் தினசரிப் பூசைகள் ஒழுங்காக நடைபொறாத ஆலயங்களில் கூடத் திருவெம்பாப் பூசையும் சங்குசேமக்கல ஓசையும் மங்களம் பொலியச்செய்து இனிய சூழலைத் தோற்றுவிப்பதாக இருக்கும்.

திருவாதிரை நாளில் சிவபெருமானைக் குறித்து விரதமிருப்பதும் திருவிழாச் செய்வதும் பெரும் சிவபுண்ணியமாகும். இதனால்தான் எலும்பாயிருந்த பூம்பாவை உயிர்பெறும் வண்ணம் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் 'ஆதிரை நாள் (விழா) காணாதே போதியோ பூம்பாவாய்' என்று மார்கழித்திருவாதிரைச் சிறப்பை அருள் செய்தார்.

திருவெம்பாவை நாட்களில் திருவெம்பாவையையோ - திருவாசகத்தையோ தவிர வேறு திருமுறைகளைப் பாராயணம் செய்யாத சைவமரபு ஒன்று வாழையடி வாழையாக உள்ளது இம்மரபு தெரியாதபலர் திருவெம்பாவை நாட்கள் ஏனைய திருமுறைகளைப் படிப்பது சமய உணர்வுடையார்க்கு வேதனை தருவதாகும் சைவசமயிகள் தமது சமய அறிவையும் மரபையும் அறிந்து பேணுவது அவசியமாகும்.

கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே-ஆர்த்த பிறவித்துயர்கெட ஆர்த்தாரும் தீர்த்தன் என்பன போன்ற வாசகங்களை சிந்திக்க உதவும் இப்புண்ணிய நாட்களை நன்கு பயன்படுத்தி சிவனருளைப் பெறமுயல்வது காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுவது போன்ற பொருத்தமான செயலாகும்.

- தி. பென்னம்பலவாணர் -

## சாவகச்சேரியில் அனுமதிப் பத்திரங்கள்

[சாவகச்சேரி]

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வாகனச் சொந்தக்காரர்களின் நன்மைகருதி, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வாகனங்கள் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் வேலைகள் ஆரம்பித்துள்ளன.

தினமும் பெருந்தொகையான விண்ணப்பங்கள் பணிமனைக்கு வந்துசேர்வதாக அறியப்படுகின்றது.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

றீகல் மினி
10-15, 1-15
ரஜனிகாந்த்-ரேவதி நடிக்கும்
மகேந்திரனின்
கை கொடுக்கும் கை

வின்ஸர் (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்(

இன்று முதல்
ஹரன் (யாழ்:நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
பாலைவனச்சோலை
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன், ஸ்ரீதேவி
நடித்த
சத்தியம்
(ஈஸ்மன் கலர்)

## வெள்ளிச்சிந்தனை

## விநாயக வணக்கம்

தன்னை வழிபாடு செய்பவருக்கு விரைவில் அருள்வது விநாயகப் பெருமானின் இயல்பு என்பது மட்டுமன்றி எந்தக் காரியத்தையும் சுலபமாக விரைவாகச் செய்வதும் விநாயகப் பெருமானின் இயல்பாகும்.

உலகத்தை முதலில் சுற்றிருபவருக்கே இப்பழம் என்று சிவபெருமான் கூறியபோது, இவ்வுலகமே தம்முருவமாக விளங்கும் சிவபெருமானையும், உமாதேவியாரையும் வணங்கி பழத்தைப் பெற்றதுவிநாயகப் பெருமான் தான் மேற்கொண்ட காரியத்தைச் சுலபமாக விரைவாகச் செய்வதற்கு ஒரு உதாரணமாகும்.

இதேபோலவே கயமுக சங்காரத்தின்போது சென்ற அவுணப் படைகள் அனைத்தையும் ஒரே தடவையில் தன். பாசத்தால் கட்டி அங்குசத்தால் சங்காரம் செய்தது பின் தன்கொம்பால் கயமுகனைத் தாக்கி அவனைப் பெருச்சாளி வாகனமாக ஏற்றருளினர். இச் செய்தியைக் கந்தபுராணம் கூறும்போது விரைவாகவும், சுலபமாகவும் விநாயகப் பெருமான் நிகழ்த்தியதாகவே கூறுவது கவனிக்கத்தக்கது.

தனது பெற்றோரை வலம் வந்து உலகை வலம்வந்ததாக கூறியதில் இரண்டு தத்துவங்களை விநாயகப் பெருமான் வலியுறுத்தியதைக் கவனிக்க வேண்டும். உலகமே சிவசொரும் என்பது ஒன்று. இக்கருத்தை இறைவன் அட்ட மூர்த்தமாய் உள்ளான் என்று கூறுவர். (அட்டமூர்த்தம் = நிலம்'நீர், நீர்-காற்று' ஆகாயம்- சூரியன்-சந்திரன்-ஆன்மா)

தாய் தந்தையரை ஒருவன் உலகம் முழுவதையும் மதித்துப் போற்றுவது போலப் போற்றவேண்டும் என்பது மற்றைய தத்துவமாகும். சிவபெருமானே தன்னை வணங்காததால் திரிபுரசங்காரத்தின் போது தேர் அச்சு முறியக் காரணமாயிருந்த தலைமை மிக்க விநாயகப்பெருமான் தாய்தந்தையரைபோற்றினர்; போற்றவேண்டும் என்பதை உணர்த்தினர் என்ற தத்துவத்தை, தம் தாய்தந்தையரிலும் பார்க்க கல்வி செல்வம் செல்வாக்கு முதலியன பெற்று அவர்களைக் கணிக்காமல் வாழும் ஒவ்வொருவரும் சிந்தித்துத் திருத்தவேண்டும்.

. இந்திரனுக்காக அகத்தியரது கமலண்டலத்திலிருந்த நதியைப் பெ கச்செய்த பிள்ளையார் அகத்தியருக்குத் தேவையான நதியை உதவியதோடு ''அகத்தியனே நீ என் தந்தையைப் பக்தி செய்பவனுதலால் என்னை பக்திசெய்வதாகவே உன்னைக் கருதுகின்றேன். நீ எப்போது எங்கு என்னை நினைத்து அழைத்தாலும் அங்கு வெளிப்பட்டு உனக்குஅருள்புரிவேன்'' என்று கூறியருளியதாகக் கந்தபுராணம் கூறுவதிலிருந்து சிவபெருமானுக்கும் பிள்ளையாருக்கும் வேற்றுமை இன்மையை உணரலாம்.

கந்தபுராணக் காப்புச் செய்யுளாகிய திகடசக்கரச் செம்முகமைந்துளான் என்னும் பாட்டு இவ்வுலகமே - பிரபஞ்சம் முழுதுமே விநாயகப்பெருமானின் திருவுருவாக விளங்குகின்றதென்பதைக் கூறுகின்றது. விநாயகப் பெருமானின் திருவுருவின் உதரபந்தனம் என்னும் ஆபரணத்தி லுள்ள ஒரு மணி போல சூரியன் இருக்கிறன். எனவே ஏனைய பிரபஞ்சப் பொருள்களெல்லாம் அவரது ஒவ்வொரு அங்கங்களாக உள்ளன என அறியவேண்டும்.

திரு விளங்கு மால்மருகா
சேவல்தனிலேறி
வருமரன் தான் ஈன்றருளும்
மைந்தா—முருகனுக்கு
முன் பிறந்த யானைமுகவா
உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீ என்றும்
காப்பு.

—பிள்ளையார் கதை

—அருளாளன்

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

## செக்குமாடு திருட்டு

[சுண்டுக்குழி]

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சிவபாதசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான செக்கிழுக்கும் காளை மாடு இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

வழமையாக இரண்டு மாடுகள் ஒரே இடத்தில் கட்டி நிற்பதாகவும், மறுநாள் காலை நித்திரை விட்டெழுந்து பார்த்தபோது ஒருமாட்டைக் காணவில்லையென்றும், பிரதான வீதிக்கருகில் உள்ள பின்பக்க வாயில்கதவு திறந்திருந்ததாகவும் அதன்வழியாக மாடு களவாடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த மாட்டின் பெறுமதி ரூபா 2000 என்று அறியப்படுகின்றது.

## அரசின்....

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

மக்களையும் சுட்டுக்கொன்றமை, அங்கவீனமாக்கியமை, படுகாயத்திற்குள்ளாக்கியமை விசேடமாக இம் மாதம் 4ம் திகதியன்று முருங்கன் தபால் அலுவலகத்தில் கடமையிலீடுபட்டிருந்த தபால் ஊழியர்களை வெளியே அழைத்துச் சுட்டுக் கொன்றமையும், அண்மையில் கூட்டுறவு, சுகாதார சேவை ஊழியர்களைச் சுட்டுக் கொலை செய்தமையும் படுகாயத்திற்குள்ளாகியமையும்.

''கடந்த மாதம் 29-ம் திகதி அரசு பிரகடனப்படுத்திய பிரமாணங்கள் மூலம் ஆயிரக்கணக்கான மீனவர்களதும், மற்றும் நாளாந்தம் உழைத்து வாழ்வோர்களதும் தொழில் வாய்ப்புக்களை முற்றாகத் தடை செய்ததின் மூலம், அவர்களின் குடும்பங்களைப் பட்டினியின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளமையும், பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்றுதலும்.

பின்வரும் கோரிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இத்தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

''வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து சகல ஆயுதப் படையினரையும் முற்றாக வாபஸ் பெறவேண்டும்.

ஆயுதப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்சப்பட்ட, ஊனமுற்ற, படுகாயமடைந்தோருக்கும் போதியளவு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

''பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை நீக்கி, கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சகலரும் விடுதலைசெய்யப்படவேண்டும்.

''வடக்குக் கிழக்கு மாகாண தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அடிப்படையில் தீர்வொன்றை ஏற்படுத்தவேண்டும்.''

இம்மகஜரின் பிரதி இன்று காலை யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும்.

## ஏ. எம். பி பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த உதவி வைத்தியர்கள்( ஏ. எம். பி.) பயிற்சிநெறி ஜனவரி மாதம் இருபத்தோராம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிநெறி மீண்டும் ஆரம்பமானதன்பின்னர் பரீட்சைகள் நடைபெறும்.

## இன்று திருவெம்பாவை

(மானிப்பாய்)

இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகிறது. எதிர்வரும் ஜனவரி 5-ம் திகதி இரதோற்சவமும், இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகமும் மறுநாள் 6-ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வ/து)
பருத்தித்துறை.

நெசவுநிலையம், பேக்கரிப் பகுதி
குத்தகைக்கு விடுதல்

எமது சங்கத்தின்கீழ் இயங்கும் நெசவுநிலையம், பேக்கரிப்பகுதி இரண்டையும் குத்தகைக்கு விடத் தீர்மானித்துள்ளோம்,

ஆகவே மேற்படி நிலையங்களைக் குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் விபரங்களைக் காரியாலயத்தில் பெற்றுக்கொண்டு உங்கள் விண்ணப்பங்களை
''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை''
என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் 03-1-85-ம் திகதிக்குமுன்னர் அனுப்பி வைக்கவும், மேலும் நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''நெசவுநிலையம்/பேக்கரிப்பகுதி குத்தகைக்கு எடுப்பதற்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்,

பொதுமுகாமையாளர்.

1984-12-20. (1104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின்; பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

— திருமந்திரம்

## நமது நோக்கு

# கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே

நத்தார் பண்டிகையும், திருப்பாவை திருவெம்பாவை விழாவும் இடித்துரைக்கும் செய்தியை நினைவு கூர்வதற்கு இன்றைய நாளும், பொழுதும் மிகப் பொருத்தமானவை.

யாழ் ஆயர் வண. தியோகுப்பிள்ளை, கடத்தப்பட்ட பொலிஸ்இன்ஸ்பெக்டர்கள் தொடர்பாக விடுத்த கோரிக்கையை எங்கள் நேற்றைய பிரசுரத்தில் படித்தவர்கள் எந்த நிலையிலும் இது நிறைவேற்றப்படவேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள்.

''கிறீஸ்தவ கொள்கையின் பிரகாரமும் மனிதாபிமான அடிப்படையிலும், நிபந்தனைகள் எதுவுமின்றி குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவரையும் விடுவிக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்'' என்பது யாழ். ஆயரின் உருக்கமான வேண்டுகோள்.

ஆயிரக்கணக்கில் அப்பாவி தமிழ் மக்கள்-வயோதிபர், பெண்கள், பிள்ளைகள், குழந்தைகள் ஈனம் இரக்கமின்றிக் கொல்லப்பட்டபோதும், அரசாங்கமோ, அரச பத்திரிகைகளோ, தென்பகுதித் தலைவர்களோ, சமயசங்கங்களோ, சான்றோர்களோ இதனைக் கண்டித்து தடுத்து நிறுத்தவேண்டுமென்று குரலெழுப்பியது எமது காதுக் கெட்டவில்லை பெரும்பான்மைக் கொடுமையென்றுதான்கூறவேண்டும்.

பரவாயில்லை இன்று ஆரம்பமாகும் திருவெம்பாவை விழா இந்துககளின் மிகச்சிறந்த விழா. பகைவரை நண்பரெனக்கொள்ள நினைவுறுத்தும் நம்பிக்கை விழா. ஆன்மவலியால் ஆட்சியின் பரந்த படையையும் வெல்லலாம் என்ற வீரத்தை விளக்கும் விழா.

பதவித்தருக்கும் படைச்செருக்கும் உள்ள அரசர், உலகின் அச்சாணியன்ன சான்றோரையும் பெரியோரையும் துச்சமாகக் கருதித் தூறுசெய்வதுண்டு. அன்னத்தில் நஞ்சு கலந்த மாந்தரை அப்பரடிகள் பகைவரெனக் கருதவில்லை. பல இன்னல்களுக்குள்ளான போதும் சஞ்சலமற்று ''அஞ்சுவதில் யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை'' எனப் பாடினார்.

எங்கள் நிலை இன்று மண்ணும் விண்ணும் நிலைகுலைந்த நிலை, ஞாயிறும் திங்களும் திசைமாறின நிலை; ஆனால் மனந்துளங்காது நாம் விடுக்கும் சவால் ஆட்சியாளரின் கண்களைத் திறக்கவும் காலந்தாழ்த்தாது கொடுமைகளை ஒழிக்கவும் உதவ வேண்டும். தமிழ் இனம் ஒன்றுபட்டு இதனை எழுப்ப வேண்டும்.

வீடுபற்றி எரியும்போது தீயை அணைப்பதில் துரிதப்படாது, அங்கும் இங்கும் காணப்படும் பெட்டி பெட்டகத்தை அப்புறப்படுத்தும் முயற்சியில் காலங்கழிப்பது மடைமை.

சர்வகட்சிமாநாடு ஆலோசனைகள் கைவிடப்பட்டதில் யாருக்கும் நட்டமில்லை போல் தெரிகிறது; மாற்று ஆலோசனைகள் தொடரவும் அரசியல் தீர்வுகாண்பதில் வெற்றிபெறுவதும் தவிர்க்கமுடியாத கடமை.

அதிலும் மிகஅவசரமான நடவடிக்கை இன்றுநிகழும் அழிவை உடனடியாக நிறுத்துதல். 'பயங்கரவாதத்தை ஒழிக்கும் போரில் தொடர்ந்தும் தோல்வியடையாது, இராணுவ அட்டூழியத்தையும் தமிழ் இளைஞரின் தீவிரவாதத்தையும் நிறுத்த வழி காணவேண்டும்.

போருக்கும் பாதுகாப்புக்கும் கங்கணம்கட்டாமல், கடந்தகாலத்தில் உண்டான தோல்விகளையும் அழிவுகளையும் கருத்தில் கொண்டு, துப்பாக்கி தூக்கி, அழித்தல்தொழிலில் ஈடுபடும் அனைவரின் இந்தப் பைத்தியம் மாறுவதற்கு பாரதத்தின் உதவி இன்றியமையாதது.

இரண்டு வருடங்களுக்கு முன் பேரூட்டில் இஸ்ரேலிய ராணுவம் நடத்திய படுகொலையை விசாரித்த கமிஷன் வழங்கியகருத்து, சுருங்கச்சொலலில், ரோமன் தத்துவ மேதை அக்குவினஸ் கூறிய 'Sin of Omission', சிலப்பதிகாரம் கூறும் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று' என்பது செய்யவேண்டியதைச் செய்யாதுவிடுதலும் அரசியல் பிழைத்தல்.

இஸ்ரேலிய தலைவர்களின் அறிக்கை இஸ்ரேலிய ஆட்சியை 'படுகொலைக்' குற்றவாளியாக்கியது

'இவ்வித படுகொலை நடக்கும்' என்பதை அனுபவத்தில் அறிந்திருந்தும், அதனை நடவாது தடுக்கத் தவறியதையே அரசியல் பிழைத்ததாகக்கொள்ளவேண்டும்.

கடந்த காலத்தில் பல முறைகளில் ஜனாதிபதி ஜெயவர்த்தன படையினர், படையினர் அல்லாத பிரத்தியேக தனிப்பட்ட படையினர் (Private Armies) நடத்திய படுகொலையைத்தாம்நினைத்திருக்காத கொடுமையெனக் கருத்துத் தெரிவித்திருந்தார். படைகளின் கட்டுப்பாடும் திருப்தியற்றதென்றார்.

இவ்விதத்தில் தட்டிக்கழிக்க உதவும்காலதாமதம் இன்று யாரை எவ்வாறு அடக்குவதென்று தெரியாத பேரிடியாய்விட்டது. நாட்டின் இரு பெரும் தேசிய இனங்கள் எல்லை கடந்த அளவிற்கு பகைமை கொள்ளும் நிலையை இது வளர்த்திருக்கிறது

ஏழைகளின்கண்ணீர், களபமைந்த மாதிரி கவலை, வினையின் பயன் — யாவும் எந்த வல்லரசையும் வீழ்த்த வல்லது.

யாழ்ப்பாணத்திலிருந்து ராணுவத்தை அகற்றுவதை முதற்படியாகக் கொண்டு ஒரு புதிய சூழ்நிலையை புது வருடத்தில் உருவாக்க ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

### நான்கு ஊழியர்...

(1ம் பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

பதாக உறுதியளித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்படியான செயல்களில் ஈடுபடமாட்டோம் என்றும் தங்களை மன்னிக்குமாறும் மேலதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

### காலக்கெடு

(1ம்பக்க 3ப் கலத்தொடர்ச்சி)

அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், அதற்கு இணங்க, சூசகமாகத் தகவலை வானொலிமூலமாகச் செய்தி அறிக்கையைத் தொடர்ந்து தெரிவிக்கலாம் என்றும், 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை எங்கு தரவேண்டுமென்ற இடம் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### பொலிஸ் மாஅதிபரிடம் கடிதம்

இக்கடிதத்தை பிரதிப் பொலிஸ் மாஅதிபர் பொலிஸ் மாஅதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கத்திடம் நேற்று கையளித்தார்.

### யாழ். மாநகரசபை...

(1-ம் பக்க3ம்கலத்தொடர்ச்சி)

மொத்த வருமானம் 24,21,360 ரூபாவாகும். இதன் செலவினம் 24,21,360 ரூபாவாகும்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் தீயணைக்கும் படை கராஜுக்கும் அலுவலகத்திற்கும் 300,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தீயணைக்கும் படை உபகரணங்களுக்கு 10,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளன.

நல்லூர் இந்து விடுதிக்கு 200,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கொட்டடி புது வீதிக்கு 900,000 ரூபாவும், கோணந் தோட்டம் புதுவீதிக்காணி சுவீகரிப்புக்கு 300,000 ரூபாவும ஒதுக்கப்பட்டுள்ளது

அச்சு யந்திர சாதனங்களுக்காக 750,000 ரூபாவும் 3-ம் கட்டச் சந்தைக்கு 3,000000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யூனிசெவ் திட்டத்தின்கீழ் 85-ம் ஆண்டு 10 பொதுமலகூடம் அமைக்க 125,000 ரூபாவும், 100 வாளி மலகூடங்களை, சுகாதார மலகூடங்களாக மாற்றுவதற்கு 100,000 ரூபாவும், 9 பொது மலகுழிகள் அமைக்க 281.350 ரூபாவும், 4 குடிநீர் திட்டங்களுக்கு 102,000 ரூபாவும், 3000 அடி கான் நடைபாதை அமைக்க 33,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (க)

### இலங்கை இனப்

(1ம்பக்கம்5ப் கலத் தொடர்ச்சி)

வடிக்கை பற்றி எமது கட்சி இந்திய பொதுத்தேர்தலுக்குப் பின்னர் தீர்மானிக்கும்.

''சர்வகட்சி மகாநாட்டு யோசனைகள் கைவிடப்பட்டமை, இலங்கை அரசு இனப் பிரச்னைக்கு இராணுவத்தீர்வு காண முயலுவதையே எடுத்துக்காட்டுகிறது.

''தமிழ்த் தீவிரவாதிகளை அடக்குகின்ற போர்வையில், இலங்கையின் ஆயுதப்படையினர் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

''இலங்கை அரசு, இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண புதுடில்லியில் தெரிவித்த யோசனைகளையும் கைவிட்டுவிட்டது.

''சர்வகட்சி மகாநாட்டு யோசனைகள் தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த எமது கட்சி தயாராகவுள்ளது'' என்றார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389-2416.

## மரண அறிவித்தல்
### திருமதி. சபாபதி சின்னம்மா

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த திருமதி. சபாபதி சின்னம்மா காலமானார். அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும், கல்வயல் சிவகுரு, செல்லம்மா, சின்னையா அன்னபூரணம், சின்னராசா [அரச மரக் கூட்டுத்தாபனம்] சுப்பிரமணியம் [இ. போ. ச. காப்பாளர் - கோண்டாவில்] கல்வயல் சின்னத்தம்பி நல்லம்மா, நடராசா [டிராக்டர் உரிமையாளர்] ஆகியோரின் தாயாரும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வேம்பராய் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். 1131

## மரண அறிவித்தல்
### நாகலிங்கம் ரூபெற் தேவதாசன்

நாகலிங்கம் ரூபெற் தேவதாசன் [Retd Shroff-Local Govt] 27-12-84 ல் காலமாகிவிட்டார். இவர் S. D நாகலிங்கம், காலஞ்சென்ற திருமதி நேசம் நாகலிங்கத்தின் புதல்வரும், அருளம்மாவின் அன்புக் கணவரும், Rex-Reggie, Ranjith-Roshan இவர்களின் அன்புத் தந்தையும், Albert- Ida- Patricia- Anton-Aloy இவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற J. N. அருளம்பலம், திருமதி அருளம்பலம் இவர்களின் மருமகனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 29-12-84 சனிக்கிழமை பி. ப. 2 00 மணிக்கு ''செல்வவாசா'' அராலிவடக்கில் நடைபெற்று பிரேதஅடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 1128

## மரண அறிவித்தல்
### செல்லப்பா சுப்பிரமணியம்

சரவணையூரை பிறப்பிடமாக கொண்டவரும் புங்குடுதீவை வசிப்பிடமாக கொண்டவரும் கௌரி போரேஜ் ஸ்ரோஸ் (யாழ்) கணக்காய்வாளரும் நீண்டகால ஈழநாடு (சரவணை) நிருபருமான அமரர் செல்லப்பா சுப்பிரமணியம் அவர்கள் 18-12-84 இல் காலமாகிவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், செந்தமிழ்செல்வி, சிவகுமாரி, முருகானந்தன், சிவானந்தன், சாந்தகுமாரி, வித்தியானந்தன், நித்தியானந்தன், வசந்தகுமாரி, ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதனின் அன்பு மாமனாரும், சுகந்தி, விமலன், செந்தில் ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-12-84இல் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. 1125

## மரண அறிவித்தல்
### திரு. இராமுப்பிள்ளை தளையசிங்கம்

பஞ்சகிரி, தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. இ. தளையசிங்கம் 26-12-84 ல் காலமானார். இவர் காலஞ்சென்ற தங்கம்மா(இளைப்பாறிய இராமநாதன்கல்லூரி ஆசிரியை)வின் அன்புக் கணவரும், தவராஜ் (டோகா) சிறீராஜ் (சி. சின்னத்துரை அன் பிறதர்), ஜெயராஜ் (நெடுஞ்சாலை திணைக்களம், முல்லைத்தீவு) ரஞ்சினி (கணக்காளர், லண்டன்), பத்மினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தீபகுமாரி (டோகா) சந்திரவதனா, சரோஜினி, சிவானந்தன் (பொறியியலாளர்-லண்டன்), மகேந்திரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். வைஷ்னி, லம்போதரன், நர்த்தனா, அரவிந், தக்ஷி, கிரிஜா ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வி. பாக்கியம் சுப்பையா (இளைப்பாறிய ஆசிரியை, உடுப்பிட்டி, உடுவில் மகளிர் கல்லூரி) வின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (28-12-84) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பளையில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். 1126

## மரண அறிவித்தல்
### N. S. திருநாவுக்கரசு

கோண்டாவில் கிழக்கு N. S. திருநாவுக்கரசு அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா, அன்னம்மா ஆகியோரின் மகனும், சற்குணத்தின் அன்புக் கணவரும், சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளர் விக்கினேஸ்வரன், திருநாவுக்கரசு அன்சன்ஸ் உரிமையாளர் புவனேஸ்வரன், மாத்தறை கந்தப்பு ஸ்ரோர்ஸ் சிவஞானம் [பிரான்சு], வட்டுக்கோட்டை N. S. T. அரிசி ஆலை வேலும்மயிலும், சத்தியமூர்த்தி [பிரான்சு], றதி, றஞ்சினி [கயானா] ஆகியோரின் அன்புத்தந்தையும், மகாதேவா [புகையிரதப் பகுதி அனுராதபுரம்] இரத்தினவடிவேல் (கயானா), விமலாதேவி, தனலெட்சுமி, றஞ்சி மல்லிகா ஆகியோரின் மாமனாரும், யசோதா, சுரேஸ், சுமிதா, றமேஸ், துஷ்யா, நிஷ்யா, பிரதீப், நிஷாற், நிருஜ், லக்ஷியா ஆகியோரின் பேரனும், காலம்சென்ற கோண்டாவில் போஸ்மாஸ்ரர் பொன்னம்பலம், நாகரத்தினம் ஆகியோரின் சகோதரரும், பொன்னம்பலம், கனகரத்தினம், இரத்தினம்மா, கண்மணி அம்மா, யோகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 28-12-84 வெள்ளிக்கிழமை பகல் 12 மணி அளவில் கோண்டாவில் கிழக்கு குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். 1130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org